பார்க்கிறபொழுது, போக்குவரத்து செறிவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 23 கிலோ மீட்டர் சாலையை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலமாக எந்தளவுக்கு அகலப்படுத்த முடியுமோ அந்தளவுக்குக் கட்டாயம் அகலப்படுத்தி, செப்பனிடப்படும் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையைச் சொல்லும்பொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாக Screen-ல் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதனை cut பண்ணிவிட்டார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நிச்சயமாக 100 சதவிகிதம் அதனை cut செய்யவில்லை. இன்றுதான் Digital House முதன்முதலாக முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படும் நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கேள்வியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் பேசும்போது முழுமையாக உங்களுடைய படம் அதில் தெரிந்தது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Screen-ல் தெரிந்தது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது தெரியவில்லை என்று சொன்னால், அதனை நான் சரிசெய்யச் சொல்கிறேன். (குறுக்கீடு) Screen-ல் தெரிந்தது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அடுத்த நிகழ்வு முடியட்டும்.

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) களியக்காவிளை, அங்கன்வாடி மையம், இடம் மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அருகே செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்திற்கு மாற்ற வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசு உயர்நிலைப் பள்ளியில் 101 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மாணவர்கள் பயில்வதற்குப் போதுமான அளவில் 8 வகுப்பறைகள் உள்ளன. மேலும், தொடக்கப் பள்ளியில் 65 மாணவர்கள் கல்வி பயில்வதற்கு 6 வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன. மேலும், இப்பள்ளி வளாகத்தில் 2 அறைகளை உடைய 1 CRC கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

இந்நிலையில் இம்மாவட்டத்தின் மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. மேற்படி களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அமைந்துள்ள இடத்தில் அதனை ஒட்டி 10 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, இடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 12

மையமானது மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே, களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கும்வரையில் அவ்விடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அருகாமையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மேற்குறிப்பிட்டுள்ள CRC மையக் கட்டடத்தில் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஒரு நல்ல பதிலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதில் சில விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. குறிப்பாக, இப்பிரச்சினையில் 4 துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று, பள்ளிக் கல்வித் துறை; இரண்டாவதாக, அங்கன்வாடிக் கட்டடம் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், சமூக நலத் துறை; மூன்றாவதாக, துணை சுகாதார நிலையம் கட்ட வேண்டியிருப்பதால், மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை; நான்காவதாக, பேரூராட்சி அலுவலகம் சம்பந்தப்பட்டிருப்பதால், நகர்ப்புர வளர்ச்சித் துறை ஆகிய நான்கு துறைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நான் கேட்கின்ற கேள்வி simple ஆக இருப்பதுபோல் தெரியும். ஆனால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதால், 4 துறைகளும் சுமூகமாக இணைந்து செயல்பட்டால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆகையால், இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கன்னியாகுமரி மாவட்டம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு மற்றொரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதுதான் procedure. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லிவிடுங்கள். பிறகு, மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வியைக் கேட்பார்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளியும் மற்றும் உயர்நிலைப் பள்ளியும் ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசு உயர்நிலைப் பள்ளியில் 101 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.*

2023 ஏப்ரல் 12] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

இப்பள்ளியில் மாணவர்கள் பயில்வதற்குப் போதுமான அளவில் 8 வகுப்பறைகள் உள்ளன. மேலும், தொடக்கப் பள்ளியில் 65 மாணவர்கள் கல்வி பயில்வதற்கு 6 வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன. மேலும், இப்பள்ளி வளாகத்தில் 2 அறைகளை உடைய 1 CRC கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

இந்நிலையில், இம்மாவட்டத்தின் மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்குக் களியக்காவிளை துணை சுகாதார நிலையம் அமைந்துள்ள இடத்தில் அதனையொட்டி 10 செண்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி மையமானது மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே, களியக்காவிளை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கும்வரையில் அவ்விடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தை அருகாமையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மேற்குறிப்பிட்டுள்ள CRC கட்டடத்தில் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 11-30

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களியக்காவிளை அரசு தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் CRC–Cluster Resource Centre ஆகியவை ஒரே கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இந்த Cluster Resource Centre (CRC)–ல் அங்கன்வாடி மையத்தினை மாற்றியமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திலேயே நிரந்தரமாகச் செயல்பட ஒப்புதலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த 10 cent நிலத்தில் பழுதடைந்த துணை சுகாதார நிலையக் கட்டடம் அமைந்துள்ளது. அதற்கு அருகாமையில் மிகவும் பழுதடைந்த அங்கன்வாடி மையக் கட்டடமும் உள்ளது. இது விவர அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது; மாண்புமிகு அமைச்சர்

அவர்களும் சொன்னார்கள். அந்தக் கட்டடத்தை இடித்தால்தான், தற்போது Urban PHC-க்கு allot ஆன fund-ஐக்கொண்டு அதனைக் கட்ட இயலும். அவ்வளவு இடம் தேவைப்படுகிறது. ஆகையால், அந்த அங்கன்வாடி மையத்தினை CRC கட்டடத்திலேயே நிரந்தரமாகத் தொடர வழிவகை செய்ய வேண்டும். இந்தப் பழுதடைந்த அங்கன்வாடி மையமானது, ஆரம்ப சுகாதார நிலையத்தின் 10 cent நிலத்தின் மையப் பகுதியில் உள்ளது. அதனை நீக்கினால்தான் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலும். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையமும் அவ்விடத்தில் இயங்க வேண்டும், துணை சுகாதார மையத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதியும் அரசிற்கு waste ஆகாத வகையில், களியக்காவிளை பேரூராட்சி அலுவலகத்தில் தற்போது இயங்கிவரும் Urban PHC-ஐ இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்ட பிறகு நிரந்தரமாக மாற்றப்படும். எனவே, துணை சுகாதார நிலையம் பேரூராட்சிக் கட்டடத்திலேயே தொடருவதற்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்துத் துறைகளின் பணிகளையும் இணைத்து அரசு கவனித்துக்கொள்ளும். விவர அறிக்கையில் அனைத்து விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்வார்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை 4 துறைகள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், 4 துறைகளுக்கிடையே இணக்கமான தன்மையுடன் இதனைச் செயல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 4 துறைகளுக்கிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு அமைச்சர்கள் தெளிவாகப் பணிகளை மேற்கொள்வார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லிவிடுங்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையமும் தேவை, அங்கன்வாடி மையமும் தேவை, அனைத்துப் பணிகளும் தொடரப்பட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று இந்தக் கோரிக்கை, நகராட்சி நிர்வாகத் துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய 4 துறைகள் சம்பந்தப்பட்டவை. நீங்கள் சொல்வதுபோன்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக அந்தத் திட்டம் நிறுத்தப்படாமலும், இதனால் எந்தத் திட்டத்திற்கும் பாதிப்பு வராதவண்ணம், பள்ளி மாணவச் செல்வங்களாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்துகின்ற பொதுமக்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், யாருக்கும் எந்த ஒரு பாதிப்பும் இல்லாதவகையில் அந்தந்தத் துறை அமைச்சர்களிடம் அந்தந்த மாவட்டத்தின் அலுவலர்கள்மூலம் பேசி, இதனை அமைப்பதற்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி என்னவென்று சொல்லுங்கள். எதற்காக எழுந்து நிற்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். தேவையானால் நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன் (குறுக்கீடுகள்) இன்றைக்குதானே நீங்கள்*